# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.12 இந்தப் பிரித்தெடுத்தல்

**வேத வசனம்:** **உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.**

*1 யோவான் 2:15*

**அறிக்கை:** **ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவன் தேவனுடைய அன்பை விட்டுப் பிரிந்து விடுவான்**



**சத்தியம்:** நாம் அந்தகாரத்தினின்று தேவனுடைய அதிசயமான வாழ்க்கைக்குள் நுழைந்திருக்கிற தேவனுக்குச் சொந்தமான பரிசுத்த ஜாதிகள்.

### வேத பகுதி: 1 சாமுவேல் 16:1-13

**பாடம்**

**1. இந்த உலகத்தின் இராஜ்யம்:** இந்த உலகில் பிசாசின் செல்வாக்கும், அவனுடைய அரசும் காணப்படுவதால் இந்த உலகின் பண்புகளும் செயல்பாடுகளும் தேவனுடைய நற்பண்புகளுக்கு எதிராகவே இருக்கிறது. வேதாகமம் உள்ளான அழகின் முக்கியத்துவத்தைப் பற்றி போதிக்கிறது. ஆனால் வெளி அழகைக்குறித்தே கவலைப்படுகிறது. மனிதன் உருவத்தைப் பார்க்கிறான். தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார். ஒரு மனிதனின் அழகு படிப்படியாய் அழிந்தாலும் தேவன் அவனை இன்னும் அதிகம் நேசிக்கிறார். தேவன் மனிதனை அழியாத நித்தியமானவைகளைத் தேடும்படி அழைக்கிறார். காரணம் உலக பொருட்கள் நிலையற்றவைகளாக காணப்படுகிறது. அது என்றும் நிலைக்காது. (1 சாமு. 16:7)

**2. நாம் இந்த உலகத்திற்குச் சொந்தமானவர்கள் அல்ல:** நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் இந்த உலகத்திற்கு சொந்தமானவர்கள் அல்ல. வேதம் சொல்லுகிறது, “நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்”. நாம் பிறருடைய வாழ்வில் தாக்கத்தை ஏற்ப்படுத்தும்படியாக கிறிஸ்துவை மையப்படுத்திய வாழ்க்கை வாழ தேவன் நமக்கு உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறார். நம்மிடமுள்ள வெளிச்சம் எங்கும் பிரசாசிக்கும், குறிப்பாக இருளில் பிரகாசிக்கும் என்று வேதபுத்தகம் நமக்கு வெளிப்படுத்துகிறது. இந்த மகிமையான வெளிச்சம் தம்முடைய பிள்ளைகளின் வாழ்வில் எப்போதும் தங்கியிருக்கும் என்று தேவன் வாக்களித்திருக்கிறார். (கொலோசெயர் 3:1,2., ஏசாயா 60:2-3)

**3. நமக்கு வேறு எந்தத் தெய்வமும் கிடையாது:** “உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்”. என்று தேவன் சொன்னார். தேவனுக்கு நாம் கொடுக்கவேண்டிய நேரத்தை எது எடுத்துக்கொள்ளுகிறதோ அதுவே நம்முடைய வாழ்வில் “வேறே தெய்வம்” எனப்படும். உலகப்பொருட்கள் நம்மை தேவனை மறக்கும்படிச் செய்து சுயத்தை சார்ந்திருக்கும்படி செய்துவிடும். (யாத். 20:2-3)

**4. நாம் நல்ல தீர்மானங்களை எடுக்க வேண்டும்:** ஒரு விமானத்தில் பயணிக்கும் ஒருவரால் ஒரே நேரத்தில் இரண்டு இருக்கையில் அமர இயலாது. அவர் எக்கானமி வகுப்பு இருக்கையை தெரிந்தெடுத்தால் முதல் வகுப்பு இருக்கையில் அமர இயலாது. அதுபோலவே ஒரு மனிதன் உலகப் பொருட்களையும் தேவனையும் ஒரே நேரத்தில் நேசிக்க இயலாது. உலகப்பொருட்கள் தேவஅன்பைவிட்டு நம்மை தொலைதூரம் பிரித்துவிடும். ஆகையால் நாம் உலகத்தில் இருந்து விடுபட்டு தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும்.

**முடிவுரை:** இன்று வாலிபர்கள் விலை உயர்ந்த பொருட்களையும் நல்ல கம்பெனி குறியிடப்பட்ட பொருட்களை மட்டுமே வாங்க விரும்புகின்றனர். கடன் பணத்தில் வாழுவது மிகவும் சாதாரணமாகிவிட்டது. அது அவர்களை உலகத்தை நேசிக்கவும், பரலோக தகப்பனை விட்டு பிரிந்திருக்கவும் செய்கிறது. கர்த்தராகிய இயேசுவை நேசிப்பவர்கள் உலக பொருட்கள் மீதும் இயேசுவின் மீதும் ஒரே நேரத்தில் அன்பு வைக்க மாட்டார்கள். அவர்கள் தேவனுடைய அன்பையே எப்போதும் சார்ந்திருப்பார்கள்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.